செய்தி வெளியீடு எண்: 234 நாள் : **21.3.2008**

## <u>தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தி</u>

**கிறித்தவ சமுதாய மக்கள் அனைவரும் இன்று (23.3.2008) ஈஸ்டர் திருநாளை மிகுந்த மகிழ்ச்சியோடும், புத்துணர்வோடும் நாடு முழுவதும் கொண்டாடுகிறார்கள்.**

**கிறித்தவ சமயம் தொண்டு சமயம் எனப் போற்றப்படுகிறது. அதற்குக் காரணம் ஏசுநாதர் தமது அறிவுரைகளின்மூலமும், தம்முடைய செயல்கள் மூலமும் தம்மை நேசிப்பவர்கள் பிறருக்குத் தொண்டு செய்பவர்களாகவே திகழ்ந்திட வேண்டும் என்று விரும்புகிறார்.**

**"மிகச் சிறியரான என் சகோதரர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று தன் அன்பர்களிடம் பிறருக்குத் தொண்டு செய்திட வேண்டும் என அறிவுரை வழங்கிடும் ஏசுநாதர், "உனக்குத் திராணி இருக்கும்போது, உரியவருக்கு நன்மை செய்யாமல் இராதே; உன்னிடம் பொருள் இருக்கையில், 'நீ போய் வா, நாளைக்குத் தருவேன்' என்று அயலானிடம் சொல்லாதே" என்று அதனை வலியுறுத்துகிறார். "நான் உங்களில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பு கூருங்கள்" என்றும், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் பெரிதான அன்பு யாரிடத்திலும் இல்லை" என்றும், "உன் அயலானில் அன்பு கூரு; உன் சத்துருவையோ பகை என்று சொல்லப்பட்டதாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களில் அன்பு கூருங்கள்" என்றும் கூறி அன்பை வளர்க்கிறார்; பகைமை உணர்வு அகன்று மண்ணில் மனித நேயம் பெருக வழிகாட்டுகிறார்.**

**இத்தகைய அறிவுரைகள் மூலம் அன்பும், மனித நேயமும், தொண்டு மனப்பான்மையும் உலகில் வளர வழிவகுத்த மனிதப் புனிதர் ஏசுநாதரைப் போற்றிக் கொண்டாடப்படும் ஈஸ்டர் திருநாளில் கிறித்தவ சமுதாய மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.